# World Brain Tumor Day 2023 : மூளையில் கட்டி இருந்தால் அறிகுறி என்ன ? எப்போது ஆபத்து? நிபுணர் விளக்கம்!

Authored by Dhanalakshmi | Samayam Tamil | Updated: 8 Jun 2023, 8:52 am

Subscribe YouTube 289K

இன்று world brain tumor day. இன்று உலக மூளை கட்டி தினம். மூளைகளில் ஏற்படும் கட்டிகளின் தாக்கம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த தினம்...



World Brain Tumor Day 2023 : மூளையில் கட்டி இருந்தால் அறிகுறி என்ன ? எப்போது ஆபத்து? நிபுணர் விளக்கம்!

இதுவரை இல்லாத குறைந்த விலை- Amazon Great Summer Sale இல் ரூ.899 முதல் ஸ்மார்ட்வாட்ச்களைப் பெறுங்கள்


ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 8 ஆம் தேதி உலக மூளைக்கட்டி தினம் கொண்டாடப்படுகிறது. 2000 ஆம் ஆண்டு முதல் ஜெர்மன் மூளை கட்டி சங்கத்தால் இந்த தினம் விழிப்புணர்வு உண்டாக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டது. இந்த தினத்தில் உலகளாவிய தனிநபர்கள், அரசு, தொண்டு நிறுவனம் என

**தொடர்பான செய்திகள்**
234 தொகுதிகளிலும்... சூடாகும் அரசியல் களம்.. விஜய் மக்கள் இயக்கம்...
தமிழகத்தில் பள்ளிகள் திறக்கும் தேதி அமைச்சர் அன்பில் மகேஷ்...
அண்ணாமலையை விளாசும் ஜெகதீஷ் ஷெட்டர்- பின்னணி...


Advertisement

**இன்றைய வெப்பநிலை**
34°C சென்னை
H 37 / L 31
Partly Cloudy

**RECOMMENDED DEALS**


**Meningioma, It's all in your head!!: Signs & Symptoms of a...**
₹ 2833.0 GET
~~₹ 18500~~ (85% OFF)


**BRAIN TUMOR: Brain Tumor; The Pathway To Freedom Of...**
₹ 311.0 GET
~~₹ 311~~ (0% OFF)


**Combat Brain Tumor: A Great Insight Into Having A Tumor**
₹ 432.0 GET
~~₹ 432~~ (0% OFF)

**ஹெல்த் டிப்ஸ்**


உஷ்ட்ராசனம் என்னும் ஒட்டக...


64 வகையான தோல் நோய்களுக்கு...

உலக பால் தினம்: பால் வளத்தைப் பெருக்க சிறப்பு நிகழ்ச்சி!

கிருஷ்ணகிரி; பிளாஸ்டிக் பொருட்களுக்கு எதிராக விழிப்புணர்வு பேரணி!


அனைத்தும் இணைந்து மக்களிடம் விழிப்புணர்வு கொண்டு வரும் நோக்கில் கொண்டாடப்பட்டது. இந்த மூளைக்கட்டி என்பது என்ன, அறிகுறிகள் எப்படி இருக்கும், இது புற்றுநோய் கட்டியாக மாறுமா என்பது குறித்து விளக்குகிறார் மருத்துவ நிபுணர் K R Suresh

Bapu, MS, MCh (Neuro) Director & Senior Consultant – Institute of Neuroscience, SIMS Hospital.

## மூளையில் கட்டி என்றால் என்ன?





முதலில் மக்கள் ஒன்று புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் மூளையில் கட்டி என்றாலே அது கேன்சராகிவிடுமோ என்று பயந்துவிடுகிறார்கள். முதலில் பயம் வேண்டாம். இதற்கு சிகிச்சைகள் உண்டு. கடந்த 23 வருடங்களாகவே இது குறித்த விழிப்புணர்வை கொண்டுவரவே இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

மூளையில் 85 பில்லியன் நரம்புகள் உண்டு. அதற்கு உதவுவதற்கும் அதே அளவு செல்களும் 85 பில்லியன் அளவு உண்டு. இந்த மூளை கட்டி என்பது மூளைக்குள்ளும் வரலாம். மண்டை ஓட்டில் எங்கு வேண்டுமானாலும் பாதிக்கலாம். 30 முதல் 40% கட்டிகள் கேன்சர் கிடையாது . சாதாரண கட்டிகள் தான்.



06:43


03:42
விரிச்சாசனம் என்னும் ஆசனா...


03:12
தைராய்டு இருந்தால்...


நினைவை இழக்கும்

உங்களுக்கானவை


இன்றைய ராசி பலன் (08 ஜூன் 2023) : Daily Horoscope, June 08


ஆடைகள், ஸ்மார்ட்வாட்ச், ஆபரணங்கள் மற்றும் லக்கேஜ் மீது 60% வரை தள்ளுபடி பெறுங்கள்


Ajith: அஜித்தை இயக்கமுடியாமல் போனதற்கு காரணம் இதுதான்..ஓப்பனாக பேசிய பிரப...


Thalapathy 68: தளபதி 68 படத்தின் நாயகி இவங்களா ? 20 வருடங்களுக்கு பிறகு இணையும்...

மூளை யில் அல்லது அதை சுற்றியுள்ள உயிரணுக்களின் அசாதாரண வளர்ச்சி கட்டிகள். சில கட்டிகள் வேகமாக வளரும். சில கட்டிகள் மெதுவாக வளரும். இவை புற்றுநோய் கட்டியாக இருந்தாலும் சாதாரண கட்டியாக இருந்தாலும் இவை இரத்த

நாளங்கள் மற்றும் திசுக்களை அழுத்தும் அளவுக்கு வளர்ந்தால் மூளையின் செயல்பாடு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.

## மூளைக்கட்டிகள் மற்றும் அதன் வகைகள்



மூளைக்குள் வளரும் கட்டிகள் glioma கட்டிக என்று அழைக்கிறோம். இது மெதுவாக வளரும். இது நான்கு நிலைகளில் வரையறுக்கப்படுகிறது. இதற்கு 4 கிரேடுகள் வரை உண்டு .
முதல் , இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலையில் இருப்பவர்களுக்கு சிகிச்சை அளித்தால் இவர்கள் ஆயுள் காலம் நீட்டிக்கலாம். அதுவே 4 வது கிரேடு என்பது மோசமான புற்றுநோய்க்கு இணையான பாதிப்பை அளிக்கும். இவர்களுக்கு சிகிச்சை அளிக்காத நிலையில் 2 அல்லது 3 மாதங்களில் அவர்கள் உயிரிழக்க நேரிடலாம். சிகிச்சை அளித்தாலும் கூட 1 முதல் 2 வருடம் வரை ஆரோக்கியமாக இருப்பார்கள். பிறகு அவர்களுக்கு மீண்டும் இந்த பாதிப்பு வரலாம்.

மூளைக்கு வெளியே மூளையின் உறை என்று அழைக்ககூடிய இந்த இடத்தில் வரக்கூடிய கட்டி Meningiomas என்று சொல்லப்படுகிறது. அதே போன்று மூளையின் நரம்புகளிலிருந்து வரக்கூடிய கட்டி இது 8 வது நரம்பு Astrocytoma கட்டிகள் என்று அழைக்கப்படும் இவை எல்லாம் சிகிச்சையில் குணப்படுத்தக்கூடியதே.

பிட்யூட்டரி அடினோமாஸ் என்பது பிட்யூட்டரி சுரப்பியில் உருவாக கூடியது. மூளையின் அடிப்பகுதியில் அமைந்துள்ள இந்த பிட்யூட்டரி சுரப்பியில் இருந்து இவை உருவாகின்றன.


Good Morning Images : பூக்களோடு காலையை துவங்குங்கள்! இனிய காலை வணக்க வாட்ஸப்...

புரதங்கள் அதிகமாக உள்ள மீன் வகைகள்...

Sachin Tendulkar வாங்கிய 4.18 கோடி ரூபாய் மதிப்பிலான SUV கார்!

Reasons for Oversleeping: அதிக நேரம் தூக்கமும் பகலில் சோர்வும் வர இதுல ஒண்ணு காரணமா...

வெயிலில் முகம் கருப்பாக மாறுதா.. இந்த பழத்தை ட்ரை பண்ணுங்க

விழுப்புரத்தில் துயர சம்பவம் - மின்சாரம் பாய்ந்து சிறுவன் பலி

அரி கொம்பனா இது.? அணையின் கரையோரம் கூலாக தண்ணீர் அருந்திய யானை..

பிபர்ஜாய் புயலால் தமிழகத்தில் வெளுத்து வாங்கப் போகும் கனமழை!

Sivaangi: அதெல்லாம் வெளிய தான்.. சிவாங்கி தொடர்பான சர்ச்சையால் கடுப்பான...

Ajith: அஜித்தை இயக்கமுடியாமல் போனதற்கு காரணம் இதுதான்..ஓப்பனாக பேசிய பிரப...






சிறுதுளி மேலும் படிக்க >




## மூளையில் கட்டி இருந்தால் அறிகுறிகள் எப்படி இருக்கும்?

நடிகர்கள்
Simbu: தரமான சம்பவம் செய்ய தயாராகி வரும் சிம்பு
மேலும் படிக்க



காது கேட்காது. மூளையில் கட்டி இருந்தால் காதுகள் கேட்காது. காது மருத்துவரிடம் செல்லும் பரிசோதனை செய்து கண்டறிவார்கள். அதிலும் தற்போது எம்.ஆர்.ஐ ஸ்கேன் எடுக்கும் போது கண்டறியப்படுகிறது.

கண் பார்வை குறையலாம். பார்வை சரியாக தெரியாது. அதே நேரம் கண் வலி இருக்காது. இவர்கள் கண் மருத்துவரை அணுகினால் அவர்கள் visual field test என்னும் பரிசோதனை செய்வார்கள். இதன் மூலம் கண்களில் எந்த நரம்புகள் பாதிப்பு அடைந்துள்ளது என்பதை அறியமுடியும். மேலும் மூளைக்கு செல்லும் நரம்பாக இருந்தால் அவர்களால் கண்டறிந்து விடுவார்கள். கட்டிகள் அழுத்தும் போது கண் நரம்புகள் பாதிப்பை அடைவதால் இந்த அறிகுறிகள் தென்படும்.


ஆரோக்கியமாக இருப்பவர்கள் 25 அல்லது 30 வருடங்கள் கழித்து வலிப்பு வருவது குறிப்பாக ஒரு கை கால்களில் மட்டும் வருவது அல்லது கை, கால் மரத்து போவது மூளை கட்டியின் அறிகுறியாக இருக்கலாம்.

தலைவலி இருக்கும். தலைவலிக்கு பல காரணங்கள் உண்டு. மூளை கட்டி இருக்கும் போது தலைவலி வரலாம். ஆனால் இந்த தலைவலி அடிக்கடி வரலாம். இரவு நேரத்தில் வரலாம். எப்போது வேண்டுமனாலும் தலைவலி வரலாம். கூடவே வாந்தியும் வரலாம். அதனால் அடிக்கடி வரும் தலைவலியும் அலட்சியம் வேண்டாம்.

குழந்தைகளுக்கு இருந்தால் வலிப்பு, வாந்தி நடையில் சமநிலையின்மை தெரியும். மருத்துவரை

அணுகினால் வயிறு பரிசோதிக்கப்பட்டு பிறகு மூளையிலும் செய்யப்படும்.

**மூளை கட்டிக்கு காரணங்கள் உண்டா?**



மூளைக்கட்டிகள் புற்றுநோயாக தான் இருக்க வேண்டும் என்றில்லை. இது மரபணுவால் வரலாம், குடும்பத்தில் யாருக்கேனும் மூளையில் கட்டி இருந்தால் குடும்ப வரலாறு காட்டி மருத்துவரை அணுகினால் சிகிச்சை அளிக்கலாம்.

ரேடியேஷன் செய்யும் போது வரலாம். இது அரிதானது. இது உணவு மற்றும் வாழ்க்கை முறையால் வரக்கூடியது அல்ல. தொற்று இல்லாத வியாதி. பொதுவாக உடல் ஆரோக்கியமாக நோய் எதிர்ப்பு சக்தி நிறைவாக இருந்தால் இவை வருவது அரிதுதான்.

**மூளைக்கட்டிகள் எப்படி கண்டறிவது? சிகிச்சை முறைகள் என்ன?**



அறிகுறிகளை கொண்டு உரிய மருத்துவர்களை அணுகும் போது குடும்ப வரலாறு, அறிகுறி வரலாறு என்று பலவும் கேட்கப்பட்டு மூளை எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மற்றும் சிடி ஸ்கேன் பரிசோதிக்கப்படும். இது சிறந்த இமேஜிங் சோதனை.

கம்ப்யூட்டர் டோமோகிராபி என்னும் சோதனைகளும் பரிந்துரைக்கப்படும். கட்டியை எளிதாக பார்க்க இது உதவும்.

பயாப்ஸி மூளை கட்டிகள் இருந்தால் அது புற்றுநோயா என்று பரிசோதிக்கப்படும் ஆனால் கிரேடு 4 நிலைகள்

இருந்தால் அது புற்றுநோய் கட்டிகள் போன்று மோசமான ஒன்று தான்.
மூளைக்கட்டிகள் எல்லாமே குணப்படுத்தகூடியது தான். ஆனால் வரும் நோயாளிகள் எந்த கிரேடில் வருகிறார்கள் என்பதை பொறுத்து சிகிச்சை முறையும் சிகிச்சை காலமும் மாறுபடலாம். இறுதி கிரேடு தவிர மற்றவர்களை முழுமையாக குணப்படுத்தலாம். அதனால் அறிகுறிகளை அலட்சியம் செய்யாமல் மருத்துவரை அணுகுங்கள். ஏனெனில் கட்டிகள் வந்தால் அதற்கு சிறந்த சிகிச்சைகள் உண்டு.


அடுத்த செய்தி




Diabetes Drinks : சர்க்கரை நோயளிகள் குடிக்க வேண்டிய பானங்கள் என்ன? தொடவே கூடாத பானங்கள் என்ன?



**Tamil News App** : உடனுக்குடன் உலக நிகழ்வுகளை உங்களது சமயம் தமிழ் ஆப்பில் நொடியில் பார்க்கலாம்

முக்கியச் செய்திகள் மற்றும் புதிய செய்திகளுக்கு **Samayam Tamil ஃபேஸ்புக்** பக்கத்துடன் தொடர்ந்திருங்கள்

உங்கள் கருத்தை பதிவு செய்க

## FROM AROUND THE WEB




மணப்பாக்கத்தில் TVS எமரால்டு பெனின்சுலா...
Ad TVS Emerald




வயது 25க்கு மேல்? ₹2Cr டெர்ம் இன்சூரன்ஸ் @₹1041/M* பெற...
Ad Insurance



10 நாளில் வழுக்கை தலையில் முடி வளரும்! இந்...
Ad Elite




சம்பளம் 5Lக்கு மேல்? ₹2Crடெர்ம் இன்சூரன்ஸ் உங்...
Ad Insurance




Become A Data Scientist Without Quitting Your Job
Ad SRM M-Tech




Power Ahead In Your Career With MTech In Artificial Intelligence
Ad SRM M-Tech

Recommended by



Copyright - 2022 Bennett, Coleman & Co. Ltd. All rights reserved. For reprint rights : Times Syndication Service